
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1070

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

43



திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# இரட்டை வேடதாரிகளை வெளுத்த வண்டிக்காரன் மகன்!

‘**வ**ண்டிக்காரன் மகன்’ திரைப்படத்தின் துவக்கத்திலேயே கலைஞர் திரையில் தோன்றி, தனது திரைப்படங்களின் நோக்கம் குறித்து பேசுவார்.

“கொள்கைகளைப் பரப்புவதே என் கலைப்பணி என்பதை எல்லோரும் அறிந்திடுவீர். அப்பணிதான் அண்ணாவழி திருப்பணியாகும். திரைப்பணியால் திருந்த வேண்டும் நம் நாடு. இல்லையேல், சூழ்ந்துவிடும் தீராத கேடு. அந்த எண்ணத்தை மனதில் வைத்து எடுத்துள்ளார் இப்படத்தை. இனி, அந்த லட்சியத்தில் வெற்றி பெற இந்நாட்டு பெரு மக்காள், தாய்மாரே, பெரியோரே, தங்கம் நிகர் உடன்பிறப்புகாள் தந்துடுவீர் ஆதரவை” அவரது உரை அவரது திரைக்கதைகளில் அவரின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தியது.

அறிஞர் அண்ணா எழுதிய ஒரு சிறுகதையை, 1978-ஆம் ஆண்டின் சூழலுக்கு ஏற்றவாறு, சில மாற்றங்களைச் செய்து சாதி ஆணவம், நிலப்பிரப்புத்துவ பிற்போக்குத்தனங்கள், போலித்தனமான மக்கள்நலன், மக்கள் விரோத ஆட்சியின் அவலம் ஆகியவற்றைக் கோர்த்து, திரைக்கதை வசனத்தை எழுதி இருப்பார் கலைஞர். கூடவே, அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆரின் போலித்தனங்களை மக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும்படியான திரைக்கதையாக அதை வடித்திருந்தார்.

படத்தின் துவக்கக் காட்சியிலேயே ஜமீன்தார் மாளிகையின் முன் மக்கள் கூட்ட மாக நிற்கின்றனர். ஜமீன்தார் (கே.ஏ.அசோகன்) வெளியே வருகிறார். காளிங்கன் (எம்.ஆர். ராதா) மக்களைப் பார்த்துச் சொல்கிறான். “எல்லோரும் மேல் துண்டை எடுத்து இடுப்புல கட்டுங்கோ!’ உடனே மக்கள் அவ்வாறே செய்கின்றனர். ‘ஜமீன்தார் வாழ்க’! என்று மக்கள் கோஷம் போடுகின்றனர். அதற்கு காளிங்கன் சொல்கிறான் ‘ஏன்டா ஜமீன்தாரை வாழ்த்த ஒரு தகுதி வேண்டாமா? அவர் உங்களை பார்த்து வாழ்க’ன்னு சொன்னா இன்னும் கொஞ்ச காலத்துக்கு நீங்க உயிரோடு இருப்பீங்க” என்கிறான்.

### ஜமீன்தார் கடவுளின் பிரதிநிதி

அடுத்த காட்சியில் வண்டிக்காரன் சடையன் (எஸ்.வி.சுப்பையா) குதிரையைக் குளிப்பாட்டும் போது, அப்பக்கமாக வரும் லிங்கன் (ஜெய்சங்கர்) மீது தண்ணீர் தெறித்துவிடுகிறது. அதைக் கண்டு சடையன் பதறிப் போய் லிங்கனின் ஷூவைத் துடைக்க வருகிறார். உடனே, லிங்கன் அவரைத் தடுக்கிறான். அப்போது அங்கு வரும் காளிங்கன் சடையனைத் திட்டி, லிங்கனின் ஷூவை துடைக்கச் சொல்கிறான்.

**லிங்கன் :** ஐயா, வேண்டாம் ஐயா, உங்க வயசு என்ன? என் வயசு என்ன? எங்க அப்பா வயசாச்சு ஐயா உங்களுக்கு... நீங்கள் இதைச் செய்யலாமா?



படங்கள் உதவி : ஞானம்

**காளிங்கன்:** வயச பத்தி என்ன? பிச்சைக் காரன் பூரா வயசானவன்தான் வர்றான். அவனை எல்லாம் நம்ம அப்பன் வயசுன்னு கட்டிக்கிட்டு அழுதா நம்ம கெதி என்ன ஆவுறது? அதனாலதான், நாட்டில் மழை பெய்யாமல் குட்டிச்சுவரா போயிருச்சு. நாமெல்லாம் ஜமீன்தார் வர்க்கம், எல்லாம் கடவுளுடைய பிரதிநிதி! இவனுக எல்லாம் வேலைக்காரப் பசங்க. நீங்க என்ன அவங்க ஜாதியா? அதான் கேட்கிறேன். டேய், சடையா தொடைடா பூட்ஸை. காலைத் தொடாமல் தொடை! ஒழுங்கா தொடை! என்கிறான்.

இவ்வாறு பண்ணை காலத்து சாதிய வர்க்க வேறுபாட்டை, பண்ணை அடிமை முறையை, மிகத் தெளிவாகத் தனது வசனத்தின் மூலம் கலைஞர் படத்தின் தொடக்கக் காட்சியிலேயே உணர்த்திவிடுகிறார்.

### தேவ ரகசியம்

இதேபோல, லிங்கன் - உமா திருமணத்தின் போது லிங்கன் மணமேடையில் இருந்து எழுந்தவுடன் காளிங்கன் ‘மாப்பிள்ளை, தாலியை உட்கார்ந்து கட்டுங்கள், ஜமீன்தார் பொண்ணு என்பதால், பயந்து போய் எழுந்து நின்னுகிட்டு கட்டப் போறீங்களா? என்று கேலியாகக் கேட்கிறான். அதற்கு லிங்கன் ‘மரியாதைக்காக எழுந்திருக்கவில்லை என் மனதில் உள்ள சில ரகசியங்களை, இந்த மண்டபத்தில் வெளியிடுவதற்காக எழுந்து நிற்கிறேன்’ என்கிறான்.

**காளிங்கன் :** அப்படி என்ன தேவ ரகசியம்?

**லிங்கன்:** ஊரார் வணங்கிட, உலகத்தார் போற்றிட, கைகட்டி சேவை செய்ய பத்து பேர். கால் பிடித்துச் சேவை செய்ய பல நூறு பேர். இன்னோரென்ன ... இன்னோரென்ன சீரோடும் சிறப்போடும் பெருவாழ்வு வாழும் மேன்மை தாங்கிய ஜமீன்தார் ஐம்புலிங்க பூபதி மகளுக்குத் தாலி கட்டப் போகிற நான், கேவலம் ஒரு சாதாரண வண்டிக்காரனின் மகன்! என்கிறான்.

உடனே சுதாரித்துக் கொள்ளும்... **ஜமீன்தார்:** என் ரத்தத்தில் ஊறிக் கிடக்கிற சமத்துவ, சமதர்ம உணர்வுகளை, நீங்க அறியாமல் இருந்திருக்கலாம். ஜமீன்தார் இசம், சமதர்ம இசம் ரெண்டும் கலந்ததுதான் இந்த ஐம்புலிங்க பூபதியிசம். ஜமீன்தார் மகளும் பத்து மாசத்தில்தான் பிறந்தாள், வண்டிக்காரன் மகனும் பத்து மாசத்தில்தான் பிறந்தான், ஜமீன்தார் மகளுக்கு சிவப்பு ரத்தம்! வண்டிக்காரன் மகனுக்கு கருப்பு ரத்தமா? ஆண்டவன் அப்படி பேதம் காட்டிப் படைக்கலையே? இருவர் உள்ளமும் இணைந்து கலந்தது. என் சமத்துவ இதயம் சந்தோசத்தால் மலர்ந்தது என்று சொல்லி மகளுக்கும் லிங்கனுக்கும் திருமணம் செய்து வைக்கும் ஜமீன்தார் திருமணம் முடிந்த கையோடு லிங்கனிடம், “இதோ இங்கு புகைந்து கொண்டிருப்பது, ஓம குண்டத்தின் நெருப்பு என் உள்ளத்தில் புகைந்து கொண்டிருப்பது எரிமலை நெருப்பு! எச்சரிக்கை! எரிமலையின் மீது நின்று மகுடி ஊத முயலாதே” என்கிறார்.

கடைசி காட்சியில், ஜமீன்தார் வைத்த நெருப்பில் ஏழைகளின் குடிசைகள் பற்றி எரிகின்றன. அதில் சிக்கி மரகதத்தின் மகள் கோகிலா இறந்தவுடன், அழுது புலம்பும் மரகதம் (மனோரமா) இப்படிப் பேசுகிறாள்...

**மரகதம்:** என் கோகிலாவைத் தீ முழுங்கிடுச்சு! இல்லை, தீயவன் ஐம்புலிங்க பூபதி முழுங்கிட்டான்! இந்த ஊரே உத்தமர் என்று நினைத்துக்கொண்டு இருக்கிற அந்த ஐம்புலிங்க பூபதி யாரு? அவன் ஒரு குடிகாரன்! கொலை காரன்! கொள்ளைக்காரன்! கயவன்! காமாந்தகன்! கன்னியரோட கற்பை கடைச் சரக்காக மதிக்கிற மனித மிருகம்! அந்த மனித மிருகத் தோட மஞ்சத்துப் பதுமையாக அகப்பட்டவள் தான் இந்த மரகதம். எங்க ரெண்டு பேருக்கும் பிறந்தவள்தான் இந்தக் கோகிலா. இப்பவே புறப்படுகிறேன் அவனுடைய அந்தரங்க மாளிகைக்கு, அவனைப் பழிக்குப் பழி வாங்கு கிறேன்! என்று சபதம் செய்கிறாள் மரகதம்.

இவ்வாறு வண்டிக்காரன் மகன் திரைப்படத்தின் தொடக்கக் காட்சி முதல் இறுதிக் காட்சி வரை நிலப்பிரபுத்துவத்தின் கொடுமைக்கு எதிராகவும் பித்தலாட்டத்துக்கு எதிராகவும் முழங்கின கலைஞரின் வசனங்கள்.

> திரைப்படத்தின் தொடக்கக் காட்சி முதல் இறுதிக் காட்சி வரை நிலப் பிரபுத்துவத்தின் கொடுமைக்கு எதிராகவும் பித்தலாட்டத்துக்கு எதிராகவும் முழங்கின கலைஞரின் வசனங்கள்.

இவ்வாறு கலைஞர் இத்திரைப்படத்தில் நிலப்பிரபுத்துவ, ஜமீன்தார் வர்க்கத்தின் மீதான தனது எதிர்ப்பை முன்வைத்தபோதே அதைச் சாதி ஆதிக்க நிலப்பிரபுத்துவமாகவும் கட்டமைத்து, அதன் மீதான எதிர்ப்புணர்வோடு சாதிமறுப்புத் திருமணத்துக்கான ஆதரவு மனநிலையையும் பார்வையாளர்களுக்கு ஏற்படுத்துகிறார்.

மேலும், அந்த நிலப்பிரபுத்துவமானது, கோவிலையும் ஆண்டவனையும் தனது சுரண்டலுக்கும் ஆதிக்கத்துக்கும் பாலியல் சூறையாடலுக்கும் பாதுகாப்பு அரணாகப் பயன்படுத்துவதையும் மிக நுணுக்கமாகக் கலைஞர் தனது வசனத்தின் மூலம் அம்பலப்படுத்தி உள்ளதையும் நாம் காண்கிறோம். அந்த வகையில், ‘வண்டிக்காரன் மகன்’ திரைப்படம் சாதி ஆதிக்கம், வர்க்க ஆதிக்கம், ஆணாதிக்கம் ஆகியவற்றை எதிர்ப்பதுடன் பகுத்தறிவு கொள்கைகளையும் இணைத்துப் பேசுகின்ற அருமையான திரைப்படமாக அமைந்துள்ளது எனலாம்.

...காட்சி விரியும்

## ஆன்மிகத் தலங்கள் அரசியல் மையங்கள் அல்ல!

**க**ன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் திருக்கோயில் தேரோட்ட நிகழ்வில், வன்முறையைத் தூண்டும் வகையில், முழக்கமிட்ட பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளை, அனைத்துச் சாதி அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக, அந்த சங்கத்தின் தலைவர் வா.ரங்கநாதன், வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘ஆலயங்கள் ஆன்மிகத்துக்கே-மதவெறி அரசியலுக்கல்ல’ என விமர்சனம் செய்துள்ளார்.

‘கருவறையில் தமிழனும் தமிழும் பூஜை செய்ய மறுக்கப்படுகிறது. இது ஆன்மிகமா? அல்லது அதிகார மேன்மை அரசியலா?

‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்’ என்ற சமூக நீதித் திட்டத்தை முடக்க நினைப்பது - பக்தி அல்ல; சாதி ஆதிக்கத்தின் அரசியல்.

இன்று பல்வேறு இடங்களில் இந்துக்கள் என்று கோஷமிடும் இவர்கள் அனைத்துச் சாதியினர் அர்ச்சகர் பயிற்சி முடித்து, 20 ஆண்டுகளாகக் காத்திருக்கும், இந்து மாணவர்களுக்கு கோஷம் எழுப்பாதது ஏன்?

இந்திய அளவில், மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க, கிறிஸ்துவ ஆலயங்களும், முஸ்லிம் மசூதிகளும்கூட பிளவு அரசியலுக்கான கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது மதத்தின் பாதுகாப்பா? அல்லது வெறுப்பின் வியாபாரமா?

ஆன்மிகத்தின் மையத்தில் வீர சாவர்க்கர் கோஷம் எதற்கு? காந்தியை சுட்ட சிந்தனைக்கும் சைவ-வைணவ-சாக்த ஒருமைப்பாட்டுக்கும் என்ன சம்பந்தம்?

மதத்தை அரசியலுக்குள் இழுப்பதும், ஆலயங்களை வெறுப்பின் மேடையாக்குவதும் சமூக அமைதிக்கான குற்றம். மதவெறிச் செயலில் ஈடுபடும் அமைப்புகளுக்கு உடனடியாக தடை விதிக்க வேண்டும் என்று அறிக்கையில் கூறியுள்ளார்.

சனாதனத்துக்கு எதிராக போர் செய்வோம்! சமத்துவ சமூக நீதியை கருவறையில் நிலைநாட்டுவோம் என்று வா.ரங்கநாதன் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



ஆர்.நாகலிங்கம்



### தலைவரின் நெஞ்சார்ந்த வாழ்த்து!

2015-ஆம் ஆண்டு அக்டோபர் 9-ஆம் தேதி என் பிறந்த நாளின்போது, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களை அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்று மகிழ்ந்தேன். அப்போது உணர்வு மிகுதியில், உங்களைக் கட்டிப் பிடிக்கட்டுமா? எனக் கேட்டேன். தலைவர், தாராளமாக என என் கைகளை அழுத்தமாகப் பிடித்து வாழ்த்தியது மறக்க முடியாது. கழக மூத்த நிர்வாகிகள், அண்ணன் டி.கே.எஸ். இளங்கோவன், அண்ணன் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்து வாழ்த்தினர். என் வாழ்நாள் முழுவதும் கழகப் பணியே என என்னை அந்த நாள் உணர வைத்தது.

**- ஆர்.நாகலிங்கம், துணை அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி, பெரம்பூர் தெற்கு பகுதி, சென்னை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### உளப்பூர்வமாக பதவி ஏற்பு!

1967-ஆம் ஆண்டு, மார்ச் 6-ஆம் தேதி பேரறிஞர் அண்ணா தலைமையில், கழகத்தின் முதல் அமைச்சரவை, பதவி ஏற்றது. அமைச்சர்கள் பதவியேற்றபோது, கீதை, ராமாயணம், குரான், பைபிள் போன்ற நூல்கள் பக்கத்தில் இருந்தும் அவற்றை யாரும் எடுக்கவில்லை. அறநிலையத் துறை அமைச்சர் உள்பட அனைவரும் உளப்பூர்வமாக என்று பதவி ஏற்றுக் கொண்டார்கள்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131